சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.35/2018

2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ம் நாள் பி.வா,சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நடராஜன் | வயது | 58 |
| த/பெ | சொலைய கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | முத்துக்கல்லூர், வெள்ளியங்காடு | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு மொத்தம் 5 செண்டுக்கு தான் என்றால் சரி தான். அந்த சொத்து வெள்ளியங்காடு கிராமம் புல எண்.515/2 ல் உள்ளது என்றால் சரி தான். என்னிடம் காட்டப்படுவது தான் அதற்குரிய சிட்டா என்றால் சரி தான். அது வா,சா.ஆ. 6. என்னிடம் காட்டப்படுவது தான் அந்த புல எண்ணுக்குரிய புல வரைபடம் என்றால் சரி தான். அது வா,சா, ஆ.7. தாவா சொத்து புல எண்.515/2 ல் வடமேற்கு மூலையில் உள்ளது என்றால் சரி தான். தற்போது தாவா சொத்தில் ஒரு கிணறும் இரண்டு சூரிய மின்சார மோட்டாரும் உள்ளது என்றால் சரி தான். அந்த கிணறையும் சூரிய மின்சார மோட்டாரையும் அமைத்து 10 வருடங்கள் இருக்கும் என்றால் 5 முதல் 6 வருடங்கள் இருக்கும். இந்த கிணற்றில் இருந்து மேற்கு நோக்கி குழாய் மூலமாக வாதிகளின் பூமிக்கு தண்ணீர் பாய்ச்சுகிறார்கள் என்றால் சரி தான். கிணறு வெட்டியது, சோலார் மோட்டார் போட்டது, பைப் அமைத்தது எங்களுக்கு தெரியும் என்றால் சரி தான்.எங்கள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல்செய்ய நானும் எனது தகப்பனார் உடன் போய் இருந்தேன் என்றால் போக வில்லை. நீதிமன்ற ஆணையர் எனது தகப்பனாரை விசாரித்தபோது எனது தகப்பனாரும் நிரூபண வாக்கு மூலத்திலும் கையெழுத்து செய்து உள்ளார் என்றால் சரி தான். நீதிமன்றத்தில் எனது அப்பாவை விசாரித்தபோதும் எனது அப்பா கையெழுத்து செய்து உள்ளார் என்றால் சரி தான். எனது அப்பா ஆரம்பத்தில் இருந்தே எப்போதும் கையெழுத்து போடுவார் என்றால் சரி

தான். 2014 ம் ஆண்டில் முத்துக் கல்லூர் கிராமத்தில் ஒரு ஏக்கரின் மதிப்பு ரூ. 5 முதல் ரூபாய் 10 லட்சத்திற்குள் இருக்கும் என்றால் சரி தான்.

வாதி தரப்பு வழக்கறிஞர் தரப்பு வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/-G.Gengaraj,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.